செய்தி வெளியீடு எண் 938 நாள் 5.12.2009

## செய்தி வெளியீடு

## முதலமைச்சர் கலைஞர் வழங்கிய நன்கொடை 61 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 3 சதவீத உள் ஒதுக்கீடுகளால் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்துள்ள 1221 அருந்ததியின மாணவ, மாணவியர்க்கு தலா 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவி

## முதலமைச்சர் கலைஞர் மாணவர்களுக்கு நிதி வழங்கும் பணிகளைத் தொடங்கி வைத்தார்

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் உள்ள அருந்ததிய சமுதாய மாணவ, மாணவியர் மருத்துவக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் சேர்ந்து உயர்கல்வி பெறுவதற்கு உதவிட ‘பெண்சிங்கம்’ எனும் திரைப்படத்திற்குக் கதை வசனம் எழுதியதற்காக தமக்கு அளிக்கப்பட்ட 50 இலட்ச ரூபாயுடன், மேலும் தமது சொந்த நிதியில் இருந்து 11 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாயையும் சேர்த்து மொத்தம் 61 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாயை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு நன்கொடையாக அளித்துள்ளார்.

அருந்ததியருக்கு 3 சதவீத தனி உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக நடப்பு ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்துள்ள 56 அருந்ததியர் வகுப்பு மாணவர்கள், பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்துள்ள 1165 அருந்ததியர் வகுப்பு மாணவர்கள் என மொத்தம் 1221 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் வீதம் 61 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாயை மருத்துவக் கல்வித்துறை இயக்குநர், தொழில் நுட்பக் கல்வித்துறை இயக்குநர் ஆகியோர் மூலம் வழங்கிட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாணையின்படி அருந்ததியின சமுதாயத்தைச் சேர்ந்த மருத்துவக் கல்வி பயிலும் 10 மாணவர்களுக்கும், பொறியியல் கல்வி பயிலும் 13 மாணவர்களுக்கும் தலா 5 ஆயிரம் ரூபாய் வீதம் நிதி வழங்கி மொத்தம் 1221 அருந்ததியின மாணவ மாணவியருக்கு கல்வி வளர்ச்சி நிதி வழங்கும் பணிகளை முதலமைச்சர் கலைஞர் இன்று (5.12.2009) காலை தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.க.பொன்முடி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.தமிழரசி, நிதித்துறைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன்,இ.ஆ.ப., உயர்கல்வித்துறைச் செயலாளர் திரு.கே.கணேசன், இ.ஆ.ப. மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் திரு.வி.கே.சுப்புராஜ், இ.ஆ.ப., தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திரு.வி.கே. ஜெயக்கொடி, இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை 9